பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**11 05 2026** **MONDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** ஆன்மிக நம்பிக்கையின் சின்னமாக சோம்நாத் கோவில் திகழ்கிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**2.** தமிழக சட்டப்பேரவையின் **17-**ஆவது கூட்டத்தொடர் இன்று தொடங்கியது. புதிய உறுப்பினர்கள் பதவியேற்றனர்.

**3.** தேசிய தொழில்நுட்ப தினம் இன்று கொண்டாடப்படுவதையொட்டி, குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

**4.** அமெரிக்க அதிபர் திரு டோனல்டு ட்ரம்ப் நாளை மறுநாள் சீனா செல்வதாக அறிவித்துள்ளார்.

**5.** ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் பஞ்சாப் அணி இன்று தில்லி அணியை எதிர்கொள்கிறது.

… இனி விரிவான செய்திகள் …

<<<<<>>>>>>

ஆன்மிக நம்பிக்கையின் சின்னமாக சோம்நாத் கோவில் திகழ்கிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலத்தில் உள்ள சோம்நாத் கோவிலின் அமிர்த மஹோட்சவத்தின் பெருவிழாவில் கலந்துகொண்டு பேசிய அவர், இந்த கோவில் புனித தன்மையின் அடையாளமாக திகழ்கிறது என்று கூறினார்.

ஜோதிர்லிங்க சிறப்பு பூஜையில் அவர் கலந்துகொண்டார்.

நாட்டின் 11 புனித நீர்நிலைகளிலிருந்து கொண்டுவரப்பட்ட புனித நீரை கொண்டு, கோவில் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இவ்விழாவின் கொடியேற்றத்திலும் பிரதமர் கலந்துகொண்டார்.

சுமார் ஒரு கிலோமீட்டர் தூரத்திற்கு **Hamirji Gohil** வரை சாலை மார்க்கமாக மக்களை சந்தித்தபடி பிரதமர் பேரணி மேற்கொண்டார்.

அனைத்து மக்களுக்கும் வாழ்த்துகளையும் பிரதமர் தெரிவித்தார்.

இந்த பேரணியில் குஜராத் முதலமைச்சர் திரு புபேந்திர பட்டேல், துணை முதலமைச்சர் திரு ஹர்ஷ் சங்வி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

<<<<<>>>>>>

சோம்நாத் கோவிலின் 75-ஆவது ஆண்டு புனரமைப்பு விழாவையொட்டி, பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள சமூக வலைதள பதிவில், சோம்நாத் ஆலயம் நாட்டின் ஆன்மிக நம்பிக்கையின் அடையாளமாக திகழ்கிறது என்று தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஆன்மிக கலாச்சார நம்பிக்கைகளை வலுப்படுத்தும் நாளாக இந்த ஆலய திருவிழா நடைபெறுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

எதிர்கால சந்ததியினர் இக்கோவிலின் பாரம்பரியத்தையும், சிறப்பையும் அறிந்துகொள்ள வேண்டும் என்றும் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

<<<<<>>>>>>

தமிழக சட்டப்பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய உறுப்பினர்கள் இன்று பதவி ஏற்றனர்.

17-ஆவது சட்டப்பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் உறுதிமொழி ஏற்று சட்டமன்ற உறுப்பினர்களாக முறைப்படி பொறுப்பேற்றுக் கொண்டனர்.

காலை ஒன்பதரை மணிக்கு பேரவையின் தற்காலிக தலைவர் திரு கருப்பையா தலைமையில் இக்கூட்டம் தொடங்கியது.

முதலமைச்சர், அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரையும் வரவேற்று நன்றி தெரிவித்த திரு கருப்பையா, புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சரை வாழ்த்தியும், பாராட்டியும் சில கருத்துகளை தெரிவித்தார்.

அதன் பின்னர் முதலமைச்சர் திரு ஜோசப் விஜய் உறுதிமொழி கூறி பதவியேற்றார்.

தொடர்ந்து அமைச்சர்கள் திரு. ஆனந்த்,

திரு. ஆதவ் அர்ஜுனா,

திரு. அருண்ராஜ்,

திரு. செங்கோட்டையன்,

திரு. வெங்கட்ரமணன்

திரு. நிர்மல் குமார்,

திரு. ராஜ்மோகன்,

திரு. **T. K.** பிரபு

திரு போஜ ராஜன்,

திருமதி பிரேமலதா விஜயகாந்த் ஆகியோரும் சட்டமன்ற உறுப்பினர்களாக பதவியேற்றனர்.

இதையடுத்து, எதிர் கட்சித் தலைவரான திரு. உதயநிதி ஸ்டாலின், முன்னாள் முதலமைச்சர்கள் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி, திரு. ஓ. பன்னீர் செல்வம் ஆகியோர் சட்டமன்ற உறுப்பினராக பதவியேற்றுக் கொண்டனர்.

இதையைடுத்து தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து உறுப்பினர்களும், அகர வரிசைப்படி உறுதிமொழி கூறி பொறுப்பேற்றுக் கொண்டனர்.

<<<<<>>>>>>

உலகளாவிய பொருளாதார நெருக்கடியை கருத்தில்கொண்டு, மக்களும், தொழில் வர்த்தகத்துறையினரும் அந்நிய செலாவணிக்கு உட்படுத்தப்படும் பொருட்கள் மீதான செலவை கணிசமாக குறைக்க வேண்டும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்திய தொழில் வர்த்தக கூட்டமைப்பு மாநாட்டில் உரையாற்றிய அவர், பொருளாதார நெருக்கடியை ஈடு செய்ய நாம் ஒவ்வொருவரின் பங்களிப்பும் அவசியமானது என்று குறிப்பிட்டார்.

அத்தியாவசியத் தேவை தவிர, வேறு எந்த பொருளையும் இறக்குமதி செய்து பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

பிரதமர் நேற்று நாட்டு மக்களுக்கு விடுத்த கோரிக்கையை சுட்டிக்காட்டிய திரு அஷ்வினி வைஷ்ணவ், உலகளாவிய பொருளாதார நெருக்கடியிலும் இந்திய பொருளாதாரத்தை சீராக பராமரிக்க வேண்டிய பொறுப்பு நாம் ஒவ்வொருவருக்கும் உள்ளதாகவும் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

தேசிய தொழில்நுட்ப தினம் இன்று கொண்டாடப்படுவதையொட்டி, குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள செய்தியில், விஞ்ஞானிகள், பொறியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருக்கும் இந்நாளில் தமது வாழ்த்துகளை தெரிவிப்பதாக கூறியுள்ளார்.

**1998-**ஆம் ஆண்டு இதே நாளில் பொக்ரானில் இந்தியா அணு ஆயுத சோதனை மேற்கொண்டதை குறிக்கும் வகையில், ஒவ்வொரு

ஆண்டும் தேசிய தொழில்நுட்ப தினம் கொண்டாடப்பட்டு வருவதாக அவர் கூறியுள்ளர்.

நாடு சுயசார்பு நிலையை எட்டுவதன் தொடக்கமாக பொக்ரான் அணு ஆயுத சோதனை அமைந்திருந்ததாகவும் திரு சி பி ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில், பொக்ரான் சோதனையை வெற்றிகரமாக முடித்த விஞ்ஞானிகளின் அர்ப்பணிப்பு உணர்வையும், கடுமையான உழைப்பையும் பாராட்டுவதாக கூறியுள்ளார்.

சுயசார்பு இந்தியாவை உருவாக்க இந்த முயற்சி பெரிதும் உதவியதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் விடுத்துள்ள செய்தியில், 1998-ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் தலைமையிலான அரசு, அரசியல் ரீதியாக தைரியத்துடன் பொக்ரான் சோதனையை மேற்கொள்ள முடிவெடுத்ததாக கூறியுள்ளார்.

பாதுகாப்புத் துறையின் வளர்ச்சிக்கும், விண்வெளி கண்டுபிடிப்புகளுக்கும் முன்னோடியாக இந்த சோதனை அமைந்தது என்றும் திரு ராஜ்நாத் சிங் குறிப்பிட்டுள்ளார்.

நாடு வளர்ச்சிப்பாதையில் விரைந்து செல்வதற்கு தூண்டுகோலாக தேசிய தொழில்நுட்ப தினம் கடைபிடிக்கப்பட்டு வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள செய்தியில், இளம் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கும் இந்நாளில் தமது வாழ்த்துகளை தெரிவிப்பதாக திரு அமித் ஷா கூறியுள்ளார்.

அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், ஆங்கில நாளேட்டில் இந்நாளையொட்டி தாம் எழுதிய கட்டுரையை பகிர்ந்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையில் அறிவியல் தொழில்நுட்பத்துறையில் நாடு வெற்றிநடை போடுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>>

**2031-35-**ஆம் ஆண்டுக்கான பருவநிலை தொடர்பான இலக்குகளை எட்டும் முயற்சியில் இந்தியா முனைப்புடன் செயல்பட்டு வருவதாக மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு புபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லி வந்துள்ள ஆஸ்திரேலிய அமைச்சர் திரு **Chris Bowen-**னுடன் பருவநிலை சவால்களை எதிர்கொள்வதற்கான கூட்டு முயற்சிகள் குறித்தும் தாங்கள் விவாதித்ததாக தெரிவித்தார்.

<<<<<>>>>>>

தமிழகத்தின் நாகை மாவட்டத்தில் பெய்துவரும் கனமழை காரணமாக, உப்பு உற்பத்தி தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் உப்பள தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — செல்வன் ஜெபராஜ் - 53 Sec. )***

<<<<<>>>>>>

அமெரிக்க அதிபர் திரு டோனல்டு ட்ரம்ப் நாளை மறுநாள் சீனா செல்வதாக அறிவித்துள்ளார்.

சீன அதிபர் திரு **Xi Jinping-**கின் அழைப்பை ஏற்று தமது மூன்று நாள் பயணத்தை மேற்கொள்ள இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா — இஸ்ரேல் - ஈரான் இடையே நிலவிவரும் போர் சூழல் குறித்தும், **Hormuz** நீரிணைப்பகுதியில் நிலவி வரும் தடைகள் குறித்தும் இரு தலைவர்களும் விவாதிப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காசிய போர் சூழல் காரணமாக, உலகளாவிய எரிபொருள் பற்றாக்குறையை தவிர்ப்பதற்கான வழிவகைகள் குறித்தும் இக்கூட்டத்தில் ஆராயப்பட உள்ளது.

அமெரிக்க அதிபரின் சீன பயணம் குறித்து தெரிவித்த, அமெரிக்க அதிபர் அலுவலகத்தின் முதன்மை செய்தித் தொடர்பாளர் **Anna Kelly,** புதன் கிழமை மாலையில் அதிபர் திரு டோனல்டு ட்ரம்ப் பெய்ஜிங் செல்வார் என்றும் தெரிவித்தார்.

வியாழக்கிழமையன்று இரு தலைவர்களும் விரிவான பேச்சுக்கள் நடத்துவார்கள் என்றும் அவர் கூறினார்.

<<<<<>>>>>>

கோஸ்டரிகா வெளியுறவு அமைச்சர் திரு **Manuel Tovar-**ரிடம் தாம் நடத்திய பேச்சுக்கள் ஆக்கப்பூர்வமாக அமைந்திருந்ததாக வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு **Pabitra Margherita** தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இந்த சந்திப்பு குறித்து தெரிவித்துள்ள அவர், இந்தியா - கோஸ்டரிகா இருதரப்பு உறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து தாங்கள் ஆலோசித்ததாக கூறியுள்ளார்.

பன்முக கலாச்சாரம், ஜனநாயகம், சர்வதேச விதிமுறைகள் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து அவரிடம் பேசியதாகவும் திரு **Pabitra Margherita** தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>>

நடப்பு நிதியாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி ஆறு புள்ளி ஆறு சதவீதமாக இருக்கும் என்று பாரத ஸ்டேட் வங்கி தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்த வங்கி இன்று வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில், உலக அளவில் பொருளாதார நெருக்கடி அதிகரித்துள்ள போதிலும், இந்தியாவின் வளர்ச்சி சீராக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளது.

வர்த்தக வங்கிகளின் வங்கிக்கடன் வளர்ச்சி 16 புள்ளி ஒரு சதவீதமாக உயர்ந்துள்ளதாகவும், கடந்த ஆண்டு இது 11 சதவீதமாக இருந்தது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வங்கிக்கடன் 29 லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் பாரத ஸ்டேஸ் வங்கி கூறியுள்ளது.

<<<<<>>>>>>

இமாச்சலப்பிரதேசத்தின் சம்பா மாவட்டத்தில் **Kakira-Lahru** நெடுஞ்சாலையில் கார் விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த ஆறு சுற்றுலாப் பயணிகள் உயிரிழந்தனர், மேலும் நான்கு பேர் பலத்த காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் டாக்டர் ராஜேந்திர பிரசாத் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

<<<<<>>>>>>

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் பஞ்சாப் அணி இன்று தில்லி அணியை எதிர்கொள்கிறது.

தரம்சாலாவில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

-------------

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் ஈஸ்ட் பெங்கால் அணி - பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

கொல்கத்தாவில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது

**<<<<<END>>>>>>**